**இராஜபாளையம் நகராட்சி**

**29.11.2019**

**திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரிவருடம் கார்த்திகை மாதம் 13ம் தேதி 2019 ம் வருடம் நவம்பர் மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்டமண்டபத்தில் மாலை 5.40 மணிக்கு இந்நகர் மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

**வருகை-திரு.பி.நடராஜன்,நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) மற்றும் தனி அதிகாரி**

1 )இந்நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக 149 தற்காலிக பணியாளர்களை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு 2015 ஆண்டு முதல் பணியாற்றி வரும் நிலையில் மீண்டும் 1.7.2018 முதல் தொடர்ச்கியாக பணியாற்றுவதற்கு இந்நகர் மன்றத்தீர்மான எண் 553 நாள் 29.6.2018-ல் அனுமதி பெறப்பட்டு 149 பணியாளர்கள் தினக்கூலியாக பணியாற்றி வருகிறார்கள்.

தற்போது 149 தினக்கூலி பணியாளர்கள் டெங்கு காய்ச்சல் பரவுவதற்கான அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்கு தற்காலிகப் பணியாளர்களின் தேவை மிகவும் அவசியமாக இருப்பதால் 1.12.2019 முதல் 89 நாட்கள் பணியினை மேற்கொள்ள நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு **எச்1/3481/2015**

**<u>அஃகு</u>**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஏற்கனவே தினக்கூலியாக பார்த்து வரும் 149 பணியாளர்கள் 1.12.2019 முதல் 89 நாட்கள் பணி செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 334 அனுமதிக்கப்பட்டது

**<u>2 )</u>**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN84C 4251 காம்பாக்ட் வாகனத்திற்கு கீழ்க்கண்ட பழுதுப்பணிகள் பாக்கும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.1,37,736/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**எச்1/7994/2019**

பழுதுப்பணிகள் விபரம்

1) கவுஸ் மீட்டர் சரி செய்தல்
2) பட்டை புதியது மாற்றி பூஸ் சரி செய்தல்
3) நான்கு வீல் கிரிஸ் பேக்கிங்
4) மெயின் கண்ணாடி புதியது
5) ஓட்டுநர் சீட் மற்றும் கவர், கிளினர் சீட் மற்றும் கவர் புதியது
6) செல்ப்பு மோட்டர் சர்வீஸ் செய்தல்
7) டைனமோ சர்வீஸ் செய்தல்
8) டேசர் பிலேட் வெல்டிங் செய்தல்
9) தொப்பி, தகடு புதியது மாற்றுதல்
10) ஓப்பன் டோர் புதியது
11) வயரிங் வேலை
12) பெயிண்டிங் வேலை
13) வாட்டர் சர்வீஸ்
14) இன்ஜீன் ஆயில்,கீர் ஆயில், கிரோன் ஆயில் புதியது

15) டீசல் பிர்டர், ஆயில் பீல்டர், ஏர் பில்டர், புதியது
16) ஸ்டார் பின் பெரியது, சிறியது மாற்றுதல்
17) பேனட் அசெம்புளி புதியது மாற்றுதல்

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணிகள் மேற்கொள்ள உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 335 அனுமதிக்கப்பட்டது

**3 )** இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் TN67Z2642 குடிநீர் டேங்கர் லாரி கிரோன் பாக்ஸில் கிரோன் பல்செட் பழுதானதை சரி செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.21988/- (இருபத்தி ஓராயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி எட்டு ரூபாய்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**இ2/8124/2019**

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குடிநீர் விநியோகம் அவசரம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 336 அனுமதிக்கப்பட்டது

**4 )**இந்நகராட்சி அலுவலகக் கட்டிடப் பகுதிகளில் இயங்கி வரும் CCTV கண்காணிப்பு கேமராவின் Video பதிவுகளை பதிவு செய்யும் 16 Cameraக்களின் TVR Box (சுமார் 1 ½ வருடங்களாக இயங்கி வருகிறது) தற்போது Recording ஆகாமல் உள்ளது. மேலும் Video பதிவுகளை பதிவு செய்யும் பழுதான Hard Disk-ஐ மாற்றம் செய்து இயக்கினால் தான் காண்காணிப்பு கேமரா வழியாக வரும் பதிவுகளை Recorder மூலம் பதிவு செய்து மறு முறை காண இயலும். மேற்படி பழுதான மின் மேன் பொருள்களை மாற்றம் செய்து (Electrical & Electric Component Spares) இயக்குவதற்கு ஆகும் செலவு தொகை ரூ.45000/- (நாற்பத்தி ஐந்நதயிரம் ரூபாய்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.இ2/8350/2019

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் 337 அனுமதிக்கப்பட்டது

**5 )**இந்நகராட்சி ஆணையாளர் அவர்களது அலுவலக பயன்பாட்டிற்கு புதிய சிவப்பு வாகனம் ரூ.900746/-க்கு மகேந்திரா & மகேந்திரா கம்பெனியில் வாங்கப்பட்டதற்கு மேற்படி புதிய ஈர்ப்பு வாகனத்திற்கு கூடுதலாக Extra பிட்டிங் செய்வதற்கும் மற்றும் ஈர்ப்பு வாகனத்திற்கு இன்சூரன்ஸ் மற்றும் வரியினை கூடுதலான உத்தேச செலவு ரூ.500000/-க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.இ1/9446/2015

**குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்.
3) உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றுள்ளதால் ஆணையர் அவரகளது அலுவலக பயன்பாட்டிற்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று வாங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 338 அனுமதிக்கப்பட்டது

6 ) இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் TN67Z2642 குடிநீர் லாரி கிரோன் பாக்ஸில் கிரோன் பல்செட் பழுதடைந்ததை சரி செய்யும் பணிக்கு 20.11.2019ல் விலைப்புள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.இ2/8124/2019

**நிறுவனத்தின் பெயர்**

| | |
|---|---|
| 1) ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ், 354,முடங்கியார் ரோடு இராஜபாளையம் | **ரூ.21,988/-** |
| 2) வேல்முருகன் மோட்டார் ஒர்க்ஸ், 272-A புகழேந்தி ரோடு இராஜபாளையம் | ரூ.22,488/- |

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

தீர்மானம் எண் 339 அனுமதிக்கப்பட்டது

7 )இந்நகராட்சி பொறியியல் பிரிவு ஈர்ப்பு எண் TN67AX7545 புதிய டயர் 4+1 எண்ணம் சப்ளை செய்யும் பணிக்கு 18.11.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.இ2/8195/2019

**நிறுவனத்தின் பெயர்**

| | |
|---|---|
| 3) நவீன் டயர்ஸ் 147சி2 டி.பி.மில்ஸ் ரோடு இராஜபாளையம் | **ரூ.29,750/-** |
| 4) மீனா டயர்ஸ் 6,6எ ரயில்வே பீடர் ரோடு இராஜபாளையம் | ரூ.30,750/- |

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கியுள்ள M/S நவீன் டயர்ஸ் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 340 அனுமதிக்கப்பட்டது

8 ) இந்நகராட்சி குடிநீர் திட்டம் பகிர்மான குழாய்கள், உந்து குழாய்கள் மற்றும் பொதுநல்லி குழாய்கள் மற்றும் வால்வுகளில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறுசிறு பராமரிப்பு மராமத்து பணிகள் செய்வதற்கு போதுமான நகராட்சி குடிநீர்

பணியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் மேற்படி பராமரிப்பு பணிகளில் ஏற்படும் பழுதுகளை ஒப்பந்தம் செய்து சரி செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,99,000/- (ஒன்பது இலட்சத்தி தொண்ணூராயிரம்)மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.இ2/8475/2019

**அஃகு**

1) அனுமதிக்கலாம்.
2) அவசல அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 341 அனுமதிக்கப்பட்டது

9 ) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015-2016ம் ஆண்டிற்கு நகராட்சிக்கு பாத்தியப்பட்ட உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 23.2.2016 அன்று டெண்டர் நடைபெற்றது. மேற்படி டெண்டரில் கலந்த கொண்ட திரு.ஆர்.சுப்புராமன் ஒப்பந்தக்காரருக்கு டெண்டர் ஜாரியாகததால் காரணத்தினால் அன்னார் செலுத்திய டெண்டர் டிபாசிட் தொகை ரூ.80.000/- வழங்க கோரி உள்ளார். மேற்படி தொகை அன்று காலம் கடந்து விட்ட படியால் காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண் 106, வ.எண் 248ல் பதிவாகி உள்ளது.மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.இ1/7743/2019

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 342 அனுமதிக்கப்பட்டது

10 ) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015-2016ம் ஆண்டிற்கு நகராட்சிக்கு பாத்தியப்பட்ட உரக்கிடங்கில் ரோடு அமைக்கும் பணிக்கு 23.2.2016 அன்று டெண்டர் நடைபெற்றது. மேற்படி டெண்டரில் கலந்த கொண்ட திரு.ஆர்.சுப்புராமன் ஒப்பந்தக்காரருக்கு டெண்டர் ஜாரியாகததால் காரணத்தினால் அன்னார் செலுத்திய டெண்டர் டிபாசிட் தொகை ரூ.74,000/- வழங்கவும். மேற்படி தொகை அன்று காலங் கடந்து வைப்பு தொகை பதிவேடு ப.எண் 106, வ.எண் 250ல் பதிவாகி உள்ளது.மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.இ1/7744/2019

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 343 அனுமதிக்கப்பட்டது

11 ) இந்நகராட்சியில் 2015-2016ம் வருடத்தில் தூய்மை இந்தியா திட்டத்தில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட உரக்கிடங்கில் காவலர் அறை துப்புரவு பாணியாளர் அறைகளை கட்டும் பணிக்கு 23.2.2016 அன்று டெண்டர் நடைபெற்றதில் திரு.ஆர்.சுப்புராமன் என்பவருக்கு டெண்டர் ஜாரியாகததால் அன்னார் செலுத்திய டெண்டர் டிபாசிட் தொகை ரூ.23,000/- வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகையானது காலங்கடந்து விட்ட படியால் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண் 106, வ.எண் 239ல் பதிவாகி உள்ளது.மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.இ1/7745/2019

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 344 அனுமதிக்கப்பட்டது

12 ) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 7366/2016/UPAZ நாள் 03.09.18 நகராட்சிப் பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018யை நகராட்சியின் நகர்மன்ற அனுமதி பெற்று செய்தி தாளில் வெளியீடு செய்து அதில் பெறப்படும் ஆட்சேபனைகளுக்கு ஆலோசனை பெறப்பட்ட பின் அதன் அடிப்படையில் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்யப்பட்ட வேண்டும்எனவும் அதற்கு முன் பெறப்படும் ஆலோசனை(ம) ஆட்சேபனைகளின் அடிப்படையில் அறுதி நகர்மன்ற தீர்மானம் பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட துணை விதிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.மேற்கண்ட துணை விதிகளை ஏதேனும் தமிழ் தினசரி நாளிதழில் விரசுரம் செய்யவும்.அதற்கான செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 345 அனுமதிக்கப்பட்டது

13 ) தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. IV) துறைஅரசாணை (நிலை) எண். 73 மற்றும் 76 நாள் . 19.07.2018 மற்றும் 26.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள் 30.07.2018 ன்படி 01.04.2018 முதல் இராஜபாளையம் நகராட்சியில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளபட்டது. இந்நிலையில் மேற்படி சொத்துவரி பொதுச்சீராய்வு மற்றும் 1.10.2017 ம்தேதி முதல் சொத்துவரி மறுசீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என அரசாணை (நிலை )எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. IV) துறை நாள் 19.11.2019ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விவரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கைந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.20.11.2019 லும் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 346 அனுமதிக்கப்பட்டது

14 ) இந்நகராட்சியில் சொத்துவரி பெயர்மாற்றம் செய்யக்கூடாது என திரு.ஆர்.லதா க/பெ. இராதாகிருஷ்ணன் என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் , இராஜபாளையம் வழக்கு எண் IA NO 1/2019 . OS NO 247/2019 ல் வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கில் நகராட்நி சார்பாக திரு.கே.காளிதாஸ் வழக்கறிஞர் ஆஜரானதற்கும் இவ்வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( 7276/2019/அ2)

**அ.கு-**

1 ) அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 347 அனுமதிக்கப்பட்டது

15 ) இந்நகராட்சியில் சொத்துவரி பெயர்மாற்றம் தொடர்பாக திரு.ஆறுமுகப்பெருமாள் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் CRP ( MD) NO 1190/2019 . ல் வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக திரு.தீலிப்குமார் வழக்கறிஞர் ஆஜரானதற்கு செலவுத்தொகை ரூ 9000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( 6768/2019/அ2)

**அ.கு-**

1 ) அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 348 அனுமதிக்கப்பட்டது

16 ) இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் அம்மா இரு சக்கர வாகனத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்ய மாவட்ட அளவில் குழு அமைத்துயும் பயனாளிகளுக்குரிய மானியக் தொகை அரசிடமிருந்து நகராட்சி வரக்கூடிய மானியக் தொகையினை தனி தலைப்பில்கீழ் வங்கி கணக்கு துவங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அரசானை (நிலை) எண் 109 ஊரக வளர்ச்சி மற்றும் ஏராட்சித் (CGS-3) துறை நாள் 09.08.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. எப்2/7223/2019

**அஃகு**

மேற்படி அரசாணையின் படி நகராட்சியின் மூலம்ம நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் 349 அனுமதிக்கப்பட்டது

17 ) இந்நகராட்சி காமராஜர் நகர் மேல்நிலை தொட்டி வளாகத்தில் ஏற்கனவே கட்டப்பட்டு முடிவு பெறமல் இருக்கும் காவலர் அறையுடன் கூடிய இருப்பு அரை கட்டிடத்தில் முழுமையாக முடிக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு ரூ8.50.லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியும் வேண்டப்படுகிறது. இ2/8596/2019

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகரிக்கலாம்.

## தீர்மானம் எண் 350 அனுமதிக்கப்பட்டது

18 ) இந்நகராட்சி விர்டு எண் 24 இங்கையராஜா தெரு மற்றும் வளையல்காரர் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின் விசைபம்புகள் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்து தண்ணீர் வீணாக வெளியே செல்கிறது என்ற அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளதின் பேரில் அவசல அவசியத்தின் காரணமாக அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் அவண்டுகோளுக்கிணங்க புதியதாக சின்டெக்ஸ் டேங்க் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.26,000/- (இருபத்தி ஆராயிரம்) –ற்கு மன்ற அனுமதி மற்றும் இப்பணியை இந்நகர்மன்ற பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி. P.பத்மசாந்தி அவர்கள் மூலம் மதிப்பீடு விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக செய்து முடிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. : இ2/8595/2019

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று இந்நகர்மன்ற பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி. P.பத்மசாந்தி அவர்கள் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் பணியினை செய்வதற்கும் வேலை உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

## தீர்மானம் எண் 351 அனுமதிக்கப்பட்டது

19 ) இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், மற்றும வால்வுகள் ஆகியவற்றில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் ஆகியவற்றினை பராமரிபு செய்யும் பணிக்கு ரூ.9.90 லட்சம் மதிப்பீட்டில் 26.11.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்: இ2/84752019

| ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|
| 1) திரு.ஆர்.வின்சென்ட் செல்வராஜ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டுத் தொகையைவிட 0.07% குறைவு |
| 2) திருமதி.P.பத்மசாந்தி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டுத் தொகையைவிட 0.39% குறைவு |

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கியுள்ள இந்நகர்மன்ற பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஆர்.வின்சென்ட் செல்வராஜ் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும ஆணையாளரின் முன்ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 352 அனுமதிக்கப்பட்டது

20 ) இந்நகர் பகுதிகளில் உள்ள அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் விதமாக 26.11.2019-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. : ந.க.எண்: இ2/8235/2019

| ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டு தொகை |
|---|---|
| 1) திருமதி.P.பத்மசாந்தி 248/300, தோப்புப்பட்டி தெரு, இராஜபாளையம் | மதிப்பீட்டு விலைவிகித்தைவிட 0.45% குறைவு |
| 2) திரு.V. சந்திசேகரன் 152/41A செவல்பட்டி தெற்கு தெரு இராஜபாளையம் | மதிப்பீட்டு விலைவிகித்தைவிட 2.44% அதிகம் |

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மதிப்பீட்டு தொகையை விட 0.45% குறைவாக கொடுத்துள்ள திருமதி.P.பத்மசாந்தி என்பவருக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 353 அனுமதிக்கப்பட்டது

21 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு J சர்வே பிளாக் எண் 1 நகரளவை எண் 184-ல குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடங்கள் தயார் செய்து மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் அலுவலகத்தில் திரு.கே.ஜே.ரவிச்சந்திரன்ராஜா, திரு.கே.ஜே. ஸ்ரீரெங்கபொருமாள்ராஜா என்ற பெயரில் மனைப்பிரிவு அனுமதி பெறப்பட்டுள்ளது.

திரு.கே.ஜே.ரவிச்சந்திரன் மற்றும் திரு.கே.ஜே ஸ்ரீரெங்கபொருமாள்ராஜா இருவரும் தன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு தான செட்டில் மென்ட் பத்திரம் மூலம் மேற்படி மனையை எழுதிக் கொடுத்துள்ளார்கள்

மேற்படி தானசெட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பெறப்பட்ட மனைப்பிரிவிற்கு இந்நகராட்சியின் தொழில் நுட்ப அனுமதி வழங்கலமா என்பது குறித்தும் பொது ஓதுக்கீடுகளை தானமாக பெறுவது குறித்தும் நகர்மன்ற வழக்கறிஞர் திரு.என் தீலீப்குமார் அவர்களிடம் கருத்துரை கோரப்பட்டது. அதற்குரிய கட்டணம் ரூ.1000/- வழங்க கோரி திரு.என் தீலீப்குமார் அவர்கள் பட்டியல் வழங்கியுள்ளா

மேற்படி வழக்கறிஞரின் கட்டணம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்: எப்1/7673/2019

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் 354 அனுமதிக்கப்பட்டது

22 ) இராஜபாளையம் நகராட்சிப்பகுதி கார்ட்டன் மார்க்கட்டில் இயங்கும் சுபம் கேபிள் டிவி நிறுவனத்தரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் நகராட்சி நிர்வரகத்தை பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட வழக்கு எண் WP No.24417-2018 எதிர்வாதுரை தயார் செய்த வகைக்கு நகர் மன்ற வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.5000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்: எப்1/6777/2000

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் 355 அனுமதிக்கப்பட்டது

23 ) இந்நகர் டி.பி.மில்ஸ் ரோட்டில் அமைந்துள்ள மகப்பேறு மருத்துவமனையில் 500LPH குடிநீர் சுத்திகரிப்பு அமைக்கும் பணிக்கு கே.பெரியசாமி எம்.அசோசியேட் என்ற நிறுவனத்தாருக்கு பொறுப்பு காலம் முடிவடைந்த விட்டபடியால் அன்னார் கோரும் 5/ASD தொகை ரூ.23798/- (ரூபாய் இருபத்தி மூன்றாயிரத்தி ஏழுநூற்றி தொன்னுற்றி எட்டு மட்டும்)

காலம் கடந்த வைப்பு தொகை பதிவேடு வ.எண் 105 வ.எண் 224 வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும். : ந.க.எண்: இ1/4090/15

**அஃகு**

1) அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் 356 அனுமதிக்கப்பட்டது

24 ) இந்நகராட்சி நகர் நல அலுவலர் அலவலக அறையில் FallCeiling , AC  உள்ளிட்ட பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ1.60 லட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மானம் எண் 357 அனுமதிக்கப்பட்டது

25 ) இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் கடைகள் மற்றும் காத்திருப்பு கூடத்தில் கதவு மாற்றுதல், வர்ணபூச்சு உள்ளிட்ட பழுது மற்றும பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.12,00,000/-க்கு 30.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்: இ1/7746/2019

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திரு.சி.குழந்தைவேலு, ஒப்பந்ததாரர் | ரூ.10,65,615 மதிப்பீட்டை விட 1.74.சதவீதம் அதிகம் |
| 2 | ஸ்ரீசரவணாகன்ஸ்ரக்ஸன், ஒப்பந்ததாரர் | ரூ.10,46,107 மதிப்பீட்டை விட 0.13 சதவீதம் குறைவு |

**அஃகு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஸ்ரீசரவணா கன்ஸ்ரக்ஸன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

## தீர்மானம் எண் 358 அனுமதிக்கப்பட்டது

26 ) இந்நகராட்சி மாடசாமி கோவில் ரோடு, குமரன் தெரு நகர்ப்புற சுகாதார மையங்களில் ஏற்கனவே அமைக்கப் பட்டு மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புனரமைக்கவும் பழைய பேருந்து நிலைய எம்.யூ.டி.எப். வணிக வளாகத்தில் புதியதாக மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படும்ம ரூ.1,30,000/-க்கு 26.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்: இ1/8203/2019

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | திரு.சி.பாஸ்கரன், ஒப்பந்ததாரர் | ரூ.1,13,095 மதிப்பீட்டை விட 0.15.சதவீதம் குறைவு |
| 2 | திரு.கே.தங்கம், ஒப்பந்ததாரர் | ரூ.1,15,305 மதிப்பீட்டை விட 1.81 சதவீதம் அதிகம் |

**அஃகு**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.சி.பாஸ்கரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) தனி அலவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 359 அனுமதிக்கப்பட்டது

27 ) இராஜபாளையம் நகராட்சி அலுவலகப் பணி மற்றும் வரி வசூல் பணிகளுக்காக பயன்படுத்தப்பாட்டு வரும் கணிணிகள் மற்றும் பிரிண்டர்களில் மூன்றாண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்ட 15 கணிணிகள் மற்றும் ஒரு ஆண்டிற்கு லோக பயன்படுத்தப்பட்ட 11 லேசர் பிரிண்டர்கள் 5 டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்களுக்கு விநியோக எத்திரவு வழங்கிய நாள் முதல் ஒரு ஆண்டிற்கு பராமரிப்பு செய்ய ரூ.1,00,000/-க்கு 19.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்: இ1/8203/2019

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | A.M. INFOTECH. RAJAPALAYAM ஒப்பந்ததாரர் | ரூ.96,360 |
| 2 | DHAYA COMPUTERS. RAJAPALAYAM, ஒப்பந்ததாரர் | ரூ.86,850 |

**அஃகு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள DHAYA COMPUTERS. RAJAPALAYAM,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

## தீர்மானம் எண் 360 அனுமதிக்கப்பட்டது

28 ) இந்நகராட்சி தெருவிளக்கு இயக்குதல் மற்றும பராமரிப்பு பணி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தரைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் 13599/16 DO நாள் 06.04.2018ன் படியும் இவ்வலுவலக வேலை உத்திரவு ந.க.எண் இ2/3641/2017 நாள் 30.07.2018 படியும் 01.08.2018 முதல் M/S ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி பணிக்கான முதலாம் ஆண்டு ஒப்பந்தம் 31.07.2019 அன்றுடன் முடிவடையும் நிலையில்

சென்னை தலைமை பொறியாளர் அவர்களின் அனுமதி ஆணையின்படி இரண்டாம் ஆண்டுக்கு பணி நீட்டிப்பு செய்ய இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 174 நாள் 16.07.2019ல் தலைமைப் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெற அனுமதி பெற அனுமதிக்கப்பட்டதின் பேரில் கருத்துரு உரிய முறையில் அனுப்பப்பட்டுள்ளது. இப்பணி டிசம்பர் மாதம் தொடரப்பட்டு வரும் நிலையில் டிசம்பர் 2019 (01.12.2019 முதல் 31.12.2019)ற்கு பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினம் ரூ.6,49,584/- (ஆறு லட்சத்தி நாற்பத்தி ஒன்பதாயிரத்து ஐந்நூற்று என்பத்தி நான்கு ரூபாய்)ற்கு இப்பணியை ஏற்னவே மேற்கொண்டு வரும் M/S ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் நிறுவனம் மலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்: இ2/3641/2017

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) டிசம்பர் 2019ம் மாத நீட்டிப்பினை தரைமை பொறியாளர் சென்னை அவர்களால் அனுமதிக்கப்படும் இரண்டாம் ஆண்டின் நீட்டிப்பில் ஈடு செய்யவும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 361 அனுமதிக்கப்பட்டது

29 ) இந்நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளிலும் பொது சுகாதாரப்பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்ய 20.11.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்: எச்1/7298/2019

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | Stickwel adhesives 1-20 செண்பக தோப்பு ரோடு இராஜபாளையம் | 1) பிளிச்சீங் பவுடர் 1 கிலோ ரூ.42.00/-<br>2) சுண்ணாம்பு தூள் 1 கிலோ ரூ.8.00/- |
| 2. | இராஜபாளையம் வேளாண்மைப் பொறியியல் பணிக்கூட்டுறவு மையம் | 1) பிளிச்சீங் பவுடர் 1 கிலோ ரூ.43.00/-<br>2) சுண்ணாம்பு தூள் 1 கிலோ ரூ.9.00/- |

**அஃகு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Stickwel adhesives நிறுவனத்தாரருக்கு சப்ளை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 362 அனுமதிக்கப்பட்டது

30 ) நகராட்சி பள்ளியில் உள்ள சத்துணவு மையங்களில் பயன்படுத்தப்படாத 237 காலி சாக்குகளை 23.09.2019 ல் ஏலம் நடைபெற்றதில் கீழ்க்கண்ட இரண்டு நபகள் கலந்து கொண்டனர்.

1. பி.தங்கமணி டிரேடர்ஸ் - ரூ 6.00 ( 1 சாக்கின் விலை)
2. யோ.பிரகாஷ் குமார் - ரூ 5.90 ( 1 சாக்கின் விலை)

அதிகமாக ஏலக்கேள்வி கேட்டவருக்கு உத்தரவு வழங்க மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

**குறிப்பு-**

1 ) மன்றம் அனுமதிக்கலாம்.
2 ) கூடுதலாக ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள பி.தங்கமணி டிரேடஸ் என்பவருக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 363 அனுமதிக்கப்பட்டது

31 ) இந்நகராட்சியில் 2006,2009 மற்றும் 2011 ம் ஆண்டுகளில் உள்ளாட்சி தேர்தல்களில் நகராட்சியில் உள்ள பயன்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகள் , தேர்தல் படிவங்கள் மற்றும் கையேடுகளை அழித்து 23.09.19 ல் ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நபகள் கலந்து கொண்டனர்.

1. யோ.பிரகாஷ் குமார் - ரூ 6.20 ( 1 கிலோவிற்கு)
2. பி.தங்கமணி டிரேடர்ஸ் - ரூ 6.25 (1 கிலோவிற்கு)

அதிகமாக ஏலக்கேள்வி கேட்டவருக்கு உத்தரவு வழங்க மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

**குறிப்பு-**

1 ) மன்றம் அனுமதிக்கலாம்.
2 ) கூடுதலாக ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள பி.தங்கமணி டிரேடஸ் என்பவருக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 364 அனுமதிக்கப்பட்டது

32 ) விருதுநகர் மாவட்டம் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விருதுநகர் மாவட்டத்திலுள்ள அரசு துறைகளின் வளர்ச்சி திட்டப்பணிகளின் விளம்பரங்களை நாளிதழ்களில் விளம்பரம் செய்திட மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 418/ஒ.ம.தொ.அ 2019 நாள்-2.8.2019 ல் உத்திரவிட்டதின் பேரில் கீழ்க்கண்ட நாளிதழ்களில் நகராட்சி திட்டப்பணிகள் விளம்பரம் செய்யப்பட்டது.(இ1/7598/2019)

1.தினகரன்

2.தினந்தந்தி

3.தினமலர்

4.தீக்கதிர்

மேலே கண்ட நாளிதழ்களில் விளம்பரம் தொழில் மலரில் விளம்பரம் , செய்யப்பட்டதற்கு தினகரன் நாளிதழ் ரூ 15540/- . தினந்தந்தி நாளிதழ் ரூ 41580/- , தீக்கதிர் நாளிதழ் ரூ 6300/- , மற்றும் தினமலர் நாளிதழ் ரூ 12285/- ஐ மேற்கண்ட நாளிதழ்களுக்கு நகராட்சி விளம்பரம் செய்த வகைக்கு மொத்தம் ரூ 75,705/- ற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு-**

1.அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 365 அனுமதிக்கப்பட்டது

33) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை 28 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 2785/2019/கே2 நாள்-8.11.2019 ல் இந்நகராட்சியில் உதவியாளராக பணியாற்றி வரும் திரு.அ.செந்தில்குமார் என்பவரை சிவகங்கை நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WMP (MD) NO .20709/2019 WP(MD) NO 24115/19 வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் பிரதிவாதியாகவும் நகராட்சி ஆணையர் இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு உள்ளதால் மேற்படி வழக்கில் இந்நகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.என்.தீலிப்குமார் மற்றும் அரசு வழக்கறிஞர் ஆஜராகவும் அதற்கான செலவுதொகைக்கு மன்ற அனுமதி வேண்டடப்ப்படுகிறது.

**அ.கு-**

1.அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 366 அனுமதிக்கப்பட்டது

34 ) இராஜபாளையம் நகராட்சிப்பகுதி சத்திரப்பட்டி சாலை நகரளவை வார்டு J சர்வே பிளாக் எண் 1 நகரளவை எண் 184 இடத்தில குடியிருப்பு மனைகளாக பிரித்து நகர் ஊரைமப்புத்துறை மதுரைள அவர்களின் ந.க.எண்.2944/2011/ம்ம3 நாள்-01.03.2012 த்தேதிய உத்தரவின்படி தொழில் நுட்ப அனுமதியும் மற்றும் ம.வ./ந.ஊ.து.இ.(ம்ம) எண் 14/2012 ன் படி மனைப்பிரிவு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்திற்கு மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் அலுவலகத்தில் திரு.கே.ஜே.ரவிச்சந்திரன்ராஜா, திரு.கே.ஜே. ஸ்ரீரெங்கபெருமாள்ராஜா என்ற பெயரில் தொழில் நுட்ப அனுமதி மற்றும் மனைப்பிரிவு அனுமதி பெறப்பட்டுள்ளது. திரு.கே.ஜே.ரவிச்சந்திரன்ராஜா, மற்றும் திரு.கே.ஜே. ஸ்ரீரெங்கபெருமாள்ராஜா இருவரும் மேற்படி மனைப்பிரிவு அனுமதி பெற்ற இடத்தினை தன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மேற்படி மனையை எழுதிகொடுத்துள்ளார்.

மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பெறப்பட்ட மனைப்பிரிவிற்கு இந்நகராட்சியின் மூலம் தொழில் நுட்ப அனுமதி வழங்கலாமா என்பது குறித்தும் பொது ஒதுக்கீடுகளை தாமதமாக பெறுவது குறித்தும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நகர்மன்ற வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை கோரப்பட்டதில் வழக்கறிஞர் 14.11.2019 ந் தேதிய சட்டக்கருத்துரையில் மனுதார்ர்கள் m.s. சாந்தி மற்றும் திரு.சி.வித்யாராஜா என்பவர் தானமாக பெற்ற ( பத்திரம் எண் 289/2017 ) ன் அனுபவித்து வரும் நிலையில் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு நகராட்சி மூலம் மனைப்பிரிவு அனுமதிக்கு ஒதுக்கீடு செய்யப்ப்ட்ட இடங்களை நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ளலாம். என சட்டக்கருத்துரையில் தெரிவித்துள்ள்ர்.

அதன் பிரகாரம் வார்டு J சர்வே பிளாக் எண் 1 நகரளவை எண் 184 உள்ள குடியிருப்பு மனை 1 முதல் 13 மனைகளாக பிரித்து ந.ஊது. மதுரை அலுவலகம் மூலம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட நிபந்தனையின்படி ( பொது பயன் பாட்டிற்காக ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா , சாலைகள் , திரவிட்ங்கங்களை மனுதார்ர் திருமதி.எம்.எஸ்.சாந்தி , திரு.சி.வித்யாராஜா என்பவர் நன்கொடை பத்திரம் எண் 5017/2019 ன் படி இந்நகராட்சியில் தானமாக வழங்கியுள்ளார்கள் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு-**

1 ) மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 367 அனுமதிக்கப்பட்டது

35 ) இராஜபாளையம் நகராட்சிப்பகுதிகளில் நில அளவை பணியாளர்களின் நிர்வாக செலவு தொகை 2/3 பங்கு கேட்பினை நகராட்சியின் பங்களிப்பு தொகை 2015-2016 வரை செலுத்தப்பட்டுள்ளது. தற்போது 2016-2017 ம் வருடத்திற்கு ரூ 8,20,536/- ( ரூபாய் எட்டு லட்சத்தி இருபதாயிரத்து ஐநுற்றி

முப்பத்தி ஆறு மட்டும்)செலுத்த தெரிவித்து மண்டலத்துணை இயக்குநர் நில அளவைப்பதிவேடு துறையின் மூலம் ( ந.க.எண்.அ8/3534/19சி1 நாள் 04.11.2019. வரப்பெற்றுள்ளது.

மேற்படி தொகை ரூ 8,20,536/- 2016-2017 வருடத்திற்கு நில அளவை கட்டணம் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(8597/2019/எப்1)

**அ.கு-**

1 ) மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 368 அனுமதிக்கப்பட்டது

36 ) இராஜபாளையம் நகராட்சிக்குரிய ஜவறர் மைதானத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் உள்ள எடை மெஷின், மிக்ஸி , பாய்லர் , கிரைண்டர் , ஆர்.ஓ. சிஸ்டம் மற்றும் மின் விளக்குகள் பழுதாகியுள்ளது. இவை அனைத்தையும் பழுது பார்த்து சரி செய்வதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ 50,000/-( ரூபாய் ஐம்பதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( 6524/2019/அ1)

**அ.கு-**

1 ) அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 369 அனுமதிக்கப்பட்டது

**37 )** இராஜபாளையம் நகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் உள்ள எழுத்தர்கள் அமையும் எஸ் டைப் சேர்கள் மற்றும் கணிணிக்குரிய ரோலிங் குஷன் சேர்கள் மற்றும் பீரோக்கள் பழுதாகியுள்ளது இவை அனைத்தையும் பழுது பார்த்து சரி செய்வதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ 50,000/-( ரூபாய் ஐம்பதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( 2255/2019/இ1)

**அ.கு-**

1 ) அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 370 அனுமதிக்கப்பட்டது

38 ) இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு எழுது பொருட்கள் கணிணி உபயோகத்திற்கு டோனர் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்ய 2019-2020 ஆண்டிற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 110 நாள் 12/06/2019 ம் படி 30,00,000/- ( முப்பது லட்சம்) அனுமதி அழித்ததன் பெயரில் எழுது பொருட்கள் விநியோகம் செய்ய 27/11/2019 ம் தேதியில் விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்க்கானும் விவரப்படி கூட்டுரவு அச்சகத்தில் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது.

1. திருநெல்வேலி மாவட்ட ஒப்பந்த கூலி செய்தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் ஐ.என்.டி.யூ.எண் 8/2007-2008 , 37 , சங்கரன்கோவில் ரோடு , திருநெல்வேலி-594110.
2. தி சிதம்பரனார் லேபர் காண்டரக்ட் சேவை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிட் ஐ.என்.டி. நம்பர் டி.என்.டி.ஐ.எண் 6/2006-2007 18 A/27 பாளையம் கோட்டை ரோடு துரத்துக்குடி-549210.
3. தி சிதம்பரனார் லேபர் அச்சு சேவை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிட் , 28பி, முத்தாந்தபுரம் முதல் தெரு , கோவில்பட்டி -703600.

மேற்கண்ட அரசு கூட்டுறவு மூன்று நிறுவனத்தில் தி சிதம்பரனார் லேபர் கான்ராட் சேவை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிட் ஐ.என்.டி. நம்பர் டி.என்.டி.ஐ. 6/2006-2007 , 18A/23ஏ பாளையங்கோட்டை ரோடு , துரத்துக்குடி பட்டியல்

விலைப்புள்ளி தொகை குறைவாக இருந்ததால் மேற்படி நிறுவனத்தில் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு-
1.மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 371 அனுமதிக்கப்பட்டது

நகராட்சி பொறியாளர் மற்றும்
ஆணையாளர்(பொ) /தனி அலுவலர்
இராஜபாளையம் நகராட்சி